(Under Section.173 BNSS)

FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
~~(Under Section 154 Cr.P.C.)~~
~~முதல் நிலை பிரிவு 154 இன் கீழ்~~

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8109488

1. District : Coimbatore PS: VSAC Year: 2025 FIR No.: 1141/2025/pcic Date: 17/07/2025
   மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முதல் தகவல் எண் நாள்

2. (i) Act சட்டம்: The prevention of Corruption Act 1988 as Amended by the PC Act (Amendment) 2018. Sections பிரிவுகள்: 7(a)
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 15.07.2025 Date to : 16.15 hrs.
   குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
   Time Period : Time from : Time to :
   நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
   (b) Information Received at PS. Date : 17.07.2025 Time : 1100hrs.
   காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
   (c) General Diary Reference : Entry No(s) Vol II 17.07.2025 Time : 1100hrs.
   பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral : Tamil Typed (Computer print)
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: approximately 10 kms, South
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
   Beat Number : (b) Address : The Hindu Religious and Charitable Endowments Department, Dr. Balasundaram Salai, Coimbatore.
   முறைக் காவல் எண் முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District : —
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : N. SURESH KUMAR (b) Father's/ Husband's Name : S/o Nanjappan.
   குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : 5/1/85 (d) Nationality : Indian (e) Passport No. :
   நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : Place of Issue :
   வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : Civil Contractor. (g) Address : Door no: 56/A, 2A Salem West Apartment, CSI Church near, Subbulapuram Layout, Pathirapuram, Coimbatore - 641027.
   தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1. Tmt. Gadira, Assistant Commissioner of the Hindu Religious and Charitable Endowments Department, Dr. Balasundaram Salai, Coimbatore.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் கருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Seperate sheet enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS .....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதல் குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

17/7/25 17/07/25

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

17/07/2025 at 1215 hrs.

Name: பெயர் J. PRABUDAS
Rank: நிலை Inspector of Police No: எண் 0[illegible]
VGRC, Coimbatore.

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p.2

கனம் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, கோயம்புத்தூர் அவர்கள் முன்பு

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:

கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 14/2025/ AC/CB, u/s. 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவலறிக்கை வரிசை எண். 8109488*-ன் தொடர்ச்சி.*

இன்று 17.07.2025-ம் தேதி வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு காவல் ஆய்வாளர் J.பிரபுதாஸ் ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது, கோயம்புத்தூர் மாவட்டம், ரத்தினபுரி, சுப்பாத்தாள் லேஅவுட், பார்ம் கிரஸ்ட் அப்பார்ட்மென்டில் வசித்து வரும் திரு.நஞ்சப்பன் என்பவரது மகன் திரு.சுரேஷ்குமார் என்பவர் கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலகம் ஆஜராகி கணினியில் தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரினை என்னிடம் கொடுத்தார். நான் அந்த புகாரினை படித்து பார்த்து, புகார் சம்மந்தமாக இரகசிய விசாரணை மேற்கொண்டதில் கோயம்புத்தூர், பாலசுந்தரம் சாலையில் அமைந்துள்ள, இந்து சமய அறநிலையத்துறை, உதவி ஆணையராக பணிபுரிந்து வரும் திருமதி.இந்திரா என்பவர், புகார்தாரரின் குலதெய்வ திருக்கோவில்களை இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கான நடவடிக்கைக்கு பரிந்துரை செய்வதற்கு ரூ.1,50,000/- லஞ்சம் கேட்டிருப்பது தெரியவந்தது. மேலும் புகாரின் அடிப்படையில் எதிரியின் நற்பெயர் குறித்து இரகசிய விசாரணை மேற்கொண்டதில் எதிரியின் நடத்தை சர்ச்சைக்குரியது என்றும், புகார்தாரருக்கும் எதிரிக்கும் தனிப்பட்ட முறையில் ஏதேனும் முன்விரோதம் உண்டா என்பது குறித்தும் மேற்கொள்ளப்பட்ட இரகசிய விசாரணையில் அவ்வாறு முன்விரோதம் எதுவுமில்லை என்பதும் தெரியவந்தது. நான் மேற்கொண்ட ரகசிய விசாரணையில் இருந்து எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய தகுந்த முகாந்திரம் இருப்பதாக தெரிய வந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று, இன்று 17.07.2025-ம் தேதி 11.45 மணிக்கு கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற

எண்.14/2025/AC/CB, u/s. 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018-ன் படி மேற்படி எதிரி திருமதி.இந்திரா என்பவர் மீது குற்ற வழக்கு பதிவு செய்தேன். புகார்தாரர் அளித்த புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புதல் N.சுரேஷ்குமார், வயது 51, த/பெ.நஞ்சப்பன், கதவு எண்.56/a 2A, பார்ம் கிரஸ்ட் அப்பார்ட்மென்ட், சி.எஸ்.ஐ. சர்ச் அருகில், சுப்பாத்தாள் லேஅவுட், ரத்தினபுரி, கோயமுத்தூர் -641027. பெறுதல் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கோயமுத்தூர். மதிப்பிற்குரிய அய்யா அவர்களுக்கு, நான் கோயம்புத்தூர் ரத்தினபுரியிலுள்ள பார்ம் கிரஸ்ட் என்ற அப்பார்ட்மென்ட்டில் கடந்த 10 வருடங்களாக எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் கடந்த 25 வருடங்களாக சிவில் காண்ட்ராக்டராக தொழில் செய்து வருகிறேன். நான் இந்து போயர் சமுதாயத்தின் உட்பிரிவான கரும்பு குலத்தார்கள் பிரிவை சார்ந்தவன். எங்கள் குலத்தவர்களுக்கான குல தெய்வக்கோயில்களான அருள்மிகு வீரமாத்தி அம்மன் கோவில், அருள்மிகு விநாயகர் கோவில், அருள்மிகு பிளேக் மாரியம்மன் கோவில் (எ) அருள்மிகு லட்சுமி அம்மன் திருக்கோவில் ஆகிய கோவில்கள் கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் வட்டம், பாப்பம்பட்டி கிராமத்தில் அமைந்துள்ளது. மேற்படி எங்களது குலதெய்வ திருக்கோவில்களில் ஏற்பட்ட சில நிர்வாக காரணங்களுக்காக மேற்சொன்ன எங்களது கோவில்களை இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்காக நானும் எனது உறவினர்களான ராக்கியாபாளையத்தை சேர்ந்த திரு.R.பழனிசாமி மற்றும் டாட்டாபாத்தை சேர்ந்த திரு.N.சரவணகுமார் ஆகியோர் 13.11.2024-ம் தேதி கோயமுத்தூர் பாலசுந்தரம் சாலையிலுள்ள, இந்து சமய அறநிலையத்துறை, உதவி ஆணையர் திருமதி.இந்திரா அவர்களை நேரில் சந்தித்து மனு கொடுத்திருந்தோம். அதன் பேரில் உதவி ஆணையர் அவர்களது அலுவலக செ.மு.ந.க.எண்.4870/2024/அ6, நாள்.03.02.2025-ன்படி மேற்படி எங்களது குலதெய்வக்கோயில்களை இந்து சமய அறநிலையத்துறையின் ஆளுகையின் கீழ் கொண்டுவருவதற்கான அறிவிப்பினை எங்களது கோவிலில் ஒட்டினார்கள். மேற்படி உதவி ஆணையரது அறிவிப்பிற்கு

எங்கள் குலத்தார்களின் சார்பில் எங்களது கருத்துகளை 18.03.2025 தேதியிட்ட கடிதத்தின் மூலம் தெரிவித்திருந்தோம். மேலும் மேற்படி கடிதத்தில் எங்களது குலதெய்வக்கோயில்களுக்கு செய்யப்பட்ட கும்பாபிஷேகம், ஆடித்திருவிழா, ஆடித்திருவிழாவின்பொருட்டு வசூலிக்கப்படும் மாங்கல்ய வரித்தொகை, கோயில்சார்பாக கட்டிவிடப்பட்ட கடைகளின் மூலம் கிடைக்கும் வாடகைத்தொகை, கோயில் மண்டபத்தின் மூலம் வரும் வருமானம், கோயில் உண்டியல் வருமானம், விஷேச நாட்களில் வசூலிக்கப்படும் தொகை மற்றும் கோயிலில் பெறப்படும் நன்கொடைகள் என சுமார் ரூ.40,00,000/-த்திற்கு மேல் ஆண்டுவருமானம் வரும் விபரத்தையும் ஆனால் மேற்படி எங்களது கோயிலுக்கு வரவேண்டிய ஆண்டுவருமானத்திற்கான கணக்கானது முறையாக பராமரிக்கப்படாத விபரத்தையும், அவை குறித்து வெளிப்படைத்தன்மை இல்லை என்பது பற்றியும், கோயில் நகைகள் குறித்து முறையான கணக்கு காண்பிப்பதில்லை என்பது பற்றியும், கோயிலுக்கான பல்வேறு விலையுயர்ந்த ஆபரணங்கள் மற்றும் பொருள்கள் உள்ளது எனவும் தெரிவித்துள்ளோம். மேலும் எங்கள் குலத்தவர்களின் ஒரு பிரிவினர் கோயிலின் பெயரில் கட்டாய நிதி வசூல் செய்துவருவது பற்றியும், கோயில் சொத்துக்கள் தொடர்பான சொத்துக்களின் விபரம் அடங்கிய கல்வெட்டு மற்றும் புகைப்படங்கள் அகற்றப்பட்டிருப்பது குறித்தும், கோயிலின் உண்டியல் அகற்றப்பட்டிருப்பது குறித்தும் தெரிவித்து மேற்படி குறைபாடுகளை ஒழுங்குபடுத்தியும், கோயில் நிர்வாகத்தை சீர்படுத்தி மேற்படி எங்களது குலதெய்வக்கோயில்களை இந்து சமய அறநிலையத்துறையின் ஆளுகையின்கீழ் கொண்டு வர நடவடிக்கை எடுக்கவேண்டியும் அக்கோயில்களை நிர்வகிக்க தனியாக ஒரு செயல் அலுவலரை நியமிக்க கோரியும் தெரிவித்திருந்தோம். மேலும் மேற்படி உதவி ஆணையர் அவர்களது அலுவலக செ.மு.ந.க.எண்.4870/2024/அ6, நாள்.03.02.2025-ன்படியான அறிவிப்பிற்கு நான் உட்பட எங்களது குலத்தாரின் பலரும் கடந்த 18.03.2025-ம் தேதி கொடுத்திருந்த கருத்துக்கள் தொடர்பான மனுவின் மீது விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டி, நான் கடந்த ஜூன் மாதத்தில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் W.P.No.21345/2025-ன் படி பேராணை மனு தாக்கல்

செய்திருந்தேன். அம்மனுவினை விசாரித்த சென்னை உயர்நீதிமன்றம் கடந்த 16.06.2025-ம் தேதியிட்ட ஆணையின்படி 12 வார காலத்திற்குள் மேற்படி 18.03.2025-ம் தேதியிட்ட எங்களது கோரிக்கையினை நிறைவேற்ற அறிவுறுத்தி நடவடிக்கை எடுக்குமாறு அம்மனுவின் 3-ம் பிரதிவாதியான இந்து சமய அறநிலையத்துறையின் உதவி ஆணையரான திருமதி.இந்திரா அவர்களுக்கு உத்தரவு பிறப்பித்திருந்தது. மேற்படி உத்தரவிற்கான Web Copy-யை நான் கடந்த 01.07.2025-ம் தேதியில் பதிவுத்தபாலின் மூலம் மேற்படி உதவி ஆணையர் திருமதி.இந்திரா அவர்களுக்கு அனுப்பியிருந்தேன். மேலும், நான் கட்ந்த 14.07.2025-ம் தேதி மாலை சுமார் 6 மணிக்கு மேல் மேற்படி உதவி ஆணையர் திருமதி.இந்திரா அவர்களை என்னுடைய செல்நம்பர் 9843025400-லிருந்து அவரது செல்நம்பர் 7708205532-க்கு தொடர்புகொண்டு பேசிய போது அவர் அலுவலில் பிசியாக இருப்பதாகவும் மறுநாள் அழைக்குமாறு தெரிவித்து அழைப்பை துண்டித்துவிட்டார். அதன்படி நான் 15.07.2025-ம் தேதி மதியம் சுமார் 2.15 மணிக்கு மேல் உதவி ஆணையர் அவர்களை தொடர்பு கொண்டபோது அவர் என்னிடம் மேற்படி எங்களது கோரிக்கையின் மீது விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமெனில் தனக்கு தனியாக ரூ.3,00,000/- பணம் கொடுக்க வேண்டும் என்றும் அது தொடர்பாக பேச அடுத்தநாள் நேரில் வருமாறு என்னிடம் தெரிவித்து அழைப்பை துண்டித்துவிட்டார். அதன்படி நான் நேற்று 16.07.2025-ம்தேதி மதியம் சுமார் 12.30 மணிக்கு நான் கோவை பாலசுந்தரம் ரோடிலுள்ள இந்து சமய அறநிலையத்துறை அலுவலகம் சென்று உதவி ஆணையர் திருமதி.இந்திரா அவர்களை நேரில் சந்தித்து எங்களது கோரிக்கையின் மீதான நடவடிக்கை குறித்து கேட்போது அவர் நான் தான் ஏற்கனவே சொல்லிட்டனே 3 லட்சம் ரூபாய் தாங்க என்று சொன்னார். அதற்கு நான் கொஞ்சம் குறைத்துக்கொள்ளுங்கள் அவ்வளவு தொகை என்றால் கொஞ்சம் சிரமம் என்னால் ஒரு லட்சம் தான் ரெடிபண்ண முடியும் என்று சொன்னேன். அதற்கு அவர் சரி 2 லட்சம் கொடுங்க ஆபீசில் எதுவும் பேசவேண்டாம் என்று சொல்லி மீண்டும் போனில் அழைப்பதாக தெரிவித்து என்னை அனுப்பிவிட்டார். 16.07.2025-ம் தேதி மாலை சுமார் 5.15 மணிக்கு மேற்படி உதவி ஆணையர்

திருமதி.இந்திரா அவர்கள் என்னை எனது செல்போனில் தொடர்புகொண்டு எனது வீடு அமைந்திருக்கும் இடம் குறித்து கேட்டார். நான் சிவானந்தாகாலணி என்று சொன்னேன். அதற்கு அவர் அங்க இருக்கா என்று கேட்டார். அதற்கு நான் சொல்லுங்க மேடம் நான் எங்க வரணும்னு கேட்டேன் அதற்கு அவர் ஈச்சனாரி கோயில் ஆபீசுக்கு அன்று மாலை 7.30 மணிக்கு வரும்படி தெரிவித்தார். நான் 7.30 மணிக்கு வந்துவிடுவதாக தெரிவித்து, இந்த வாரத்தில கோயிலை எடுக்க வாய்ப்புள்ளதா என்று கேட்டேன். அதற்கு அவர் ஆணையருக்கு ரிப்போர்ட் அனுப்பனும் என்றும், அவரது அலுவலகத்திலிருந்து சென்னைக்கு அனுப்பவேண்டுமென்றும் அனுப்பிய பின்னர் சென்னையிருந்து உத்தரவு வருமென்றும், அதை பாலோ செய்து வாங்கிவிடலாம் என்றும் கோயில் நிர்வாகியை போடுவது சம்மந்தமாகவும் பேசினார். நான் நீங்க சொன்ன பார்மாலிட்டீஸ் சம்மந்தமாக எப்போ வரட்டும்மென்று கேட்டேன் அதற்கு அவர் அன்றைக்கே வருமாறு தெரிவித்தார். நான் ஒன்னும் அரேன்ஞ் செய்யவில்லை என்றும் எவ்வளவு கொண்டு வரனும்னு கேட்டதற்கு அவர் நான் ஏற்கனவே சொன்னேன்ல என்று சொன்னார். அதற்கு நான் 1 லட்சம்தான் என்று சொன்னேன். அதற்கு அவர் 2-ன்னு ஏற்கனவே சொல்லியிருப்பதை தெரிவித்தார். அதற்கு நான் நாங்கெல்லாம் அவ்வளவு பெரிய ஆளில்லை என்றும் கொஞ்சம் கம்மிபண்ணுங்க என்று கேட்டேன். அதற்கு அவர் சரி ஒரு 50 குறைச்சுக்குங்க என்று சொல்லிவிட்டு இன்ஸ்பெக்டரிடம் ரிப்போர்ட் வாங்கி சீக்கிரமா அனுப்பி விடுவதாக சொன்னார். பின்னர் நேற்று 16.07.2025-ம் தேதி மாலை சுமார் 7 மணியளவில் உதவி ஆணையர் திருமதி.இந்திரா அவர்கள் என்னை போனில் தொடர்பு கொண்டு வறீங்களா என்று கேட்டார். அதற்கு நான் வந்துகொண்டிருப்பதாக சொன்னேன். வந்துவிட்டு கூப்பிடும்படி சொல்லிவிட்டு அழைப்பை துண்டித்துவிட்டார். அதன் பிறகு அன்றிரவு சுமார் 08.00 மணியளவில் அவர் சொன்னபடி நான் மேற்படி ஈச்சனாரி கோயில் அலுவலகம் சென்றபோது அங்கில்லாததால் நான் அவரை போனில் தொடர்பு கொண்டு பேசினேன். அதற்கு அவர் அவசர வேலையாக வெளியில் கிளம்பிவிட்ட விபரத்தை தெரிவித்து நாளை கூப்பிட்டுவிட்டு வரும்படி சொல்லிவிட்டு போனை வைத்துவிட்டார். மேலும் உயர்

நீதிமன்றம் உத்தரவிட்டும் எங்களது குலதெய்வ திருக்கோவில்களை இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கான நடவடிக்கைக்கு பரிந்துரைக்க ரூ.1,50,000/-ஐ இந்து சமய அறநிலையத்துறையின் உதவி ஆணையர் திருமதி.இந்திரா அவர்களுக்கு லஞ்சமாக கொடுக்க எனக்கு விருப்பமில்லை. மேலும் நானும் மேற்படி உதவி ஆணையர் திருமதி.இந்திரா அவர்களும் போனில் பேசிய உரையாடல்களை பென்டிரைவில் பதிவு செய்து இப்புகாருடன் இணைத்துள்ளேன். எனவே மேற்படி உதவி ஆணையர் திருமதி.இந்திரா அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, தங்கள் உண்மையுள்ள, sd.XXXXX 17.07.2025 (N.Sureshkumar). Madam/Sir, Received the above complaint on 17.07.2025 at 11.00 hrs. sd.XXXXX, (J.PRABUDASS) 17/07/2025, Insp., V&AC, Cbe. Madam/Sir, After conducting a Discreet Enquiry, a case in Coimbatore V&AC Cr.No.14/2025/AC/CB, u/s. 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 was registered by me on 17.07.2025 at about 11.45 hrs sd.XXXXX, (J.PRABUDASS) 17/07/2025, Inspector of Police, V&AC, Coimbatore. இம்முதல் தகவல் அறிக்கையின் அசல், வாதியின் புகார் மனு மற்றும் 63(4)(c) of B.S.A 2023 சான்றுடன் கூடிய Pen Drive ஆகியவற்றை கனம் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, கோயம்புத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்து இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

(J.பிரபுதாஸ்) 17/07/25.
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.